மாண்புமிகு திரு. கே. ராஜா முகமது : தலைவர் அவர்களே கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளில் 50 சதவீதம், 60 சதவீதம் வரையுள்ள துணிகள் கோ-ஆப்டெக்ஸ் மூலம் வினியோகம், விற்பனை செய்யப்பட்டு வருகிறது, மேலும் இந்தத் தேக்கங்கள் இல்லாதவாறு, உற்பத்தி வினியோகம். இவை, கோ-ஆப்டெக்ஸ் மூலம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுவரை, இரண்டு லட்சம் ரூபாய் அளவுக்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. தொடர்ந்து கொள்முதல் நடைபெற்று வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பெரியாறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடாததால் மேலூர் தொகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. அ. மா. பரமசிவன் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு நீர்த் தேக்கத்திலிருந்து இதுவரையில் தண்ணீர் திறந்து விடாததால் மேலூர் சட்ட மன்றத் தொகுதிக்கு வேண்டிய நீர் கிடைக்காததால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள அவசர நிலை பற்றியும் அதற்கு உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்லந்திரி மதகுப் பலகை மேலுள்ள இருபோக சாகுபடி நிலங்களின் பாசனத்திற்காக பெரியாறு தலைமைக் கால்வாயைத் திறக்கும் இயல்பான தேதி ஜூன் முதல் நாளாகும். ஆகஸ்ட் 15-ம் தேதி அன்றுதான் ஒருபோக சாகுபடி செய்யும். மீதமுள்ள நிலப் பரப்புகளுக்குத் தண்ணீர் வழங்க வேண்டும். மேலூர் வட்டத்திலுள்ள நிலப்பரப்பு பெரும்பாலானவை ஒரு போக சாகுபடி நிலங்கள்தான் ஆகும்.

இந்த வருடம் இயல்பான தேதியாகிய ஜூன் மாதம் முதல் நாளன்று கல்லந்திரி மதகுப் பலகை மேலுள்ள இரு போக சாகுபடி நிலங்களின் பாசனத்திற்காகத் தண்ணீர் ஏற்கனவே திறந்துவிடப்பட்டாயிற்று நீர்த்தேக்க நிலை சாதகமாக உள்ளதால் குறிப்பிட்ட ஆகஸ்ட் 15-ஆம் தேதியன்று ஒருபோக சாகுபடி நிலங்களுக்கும் தண்ணீர் திறந்துவிடக் கருதப்படுகின்றது.